DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
(In the Court of the Additional District Munsif, Sankarankovil )

| | |
|---|---|
| Calendar | --- |
| Miscellaneous | --- |
| Preliminary Register | : S**TC 12/2024** |
| Deposition of Witness for | : PW 7 |
| Name | : டாக்டர்.உமா |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |
| Date | : 06.02.2026 |

Solemnly affirmed in accordance with provision of act 1873 on the day of 6th February 2026.

**எதிரிகள் ஆஜர் இல்லை. மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல்விசாரணை:**

நான் தற்போது கோவில்பட்டி அரசு தலைமை மருத்துவமனையில் குடிமை மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். நான் 23.10.2015 அன்று மதியம் 2.40 மணியளவில் அவசர சிகிச்சை பகுதியில் பணியில் இருந்தபோது நடராஜன் என்பவரை அவருடை மகன் என்னிடம் சிகிச்சைக்காக அழைத்து வந்தார். நோயாளி 23.10.2015 அன்று சுமார் காலை 8 மணியளவில் தன் வயக்காட்டில் வைத்து தனக்கு தெரிந்த நபர் ஒருவர் தன்னை பிடித்துக்கொண்டதாகவும், மற்றொரு தெரிந்தநபர் தன்னை இடது கன்னத்தில் அறைந்து தன் நெஞ்சில் மிதித்ததாக கூறினார். அவரை பரிசோதனை செய்தபோது அவர் சுயநினைவுடன் இருந்தார். அவரது நாடித்துடிப்பு, ரத்தக்கொதிப்பு சீராக இருந்தது. அவர் தனக்கு நெஞ்சிலும், இடது கன்னத்திலும் வலி இருப்பதாக கூறினார். அவருக்கு புற காயங்கள் எதுவும் காணப்படவில்லை. அவரை உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்டு அவருக்கு சிகிச்சை வழங்கப்பட்டது. அவருக்கு

நெஞ்சுப்பகுதியில் நுண்கதிர் படம் எடுக்கப்பட்டது. அதில் எலும்பு முறிவு எதுவு காணப்படவில்லை. 28.10.2015 அன்று மருத்துவமனையிலிருந்து சொந்த விருப்பத்தின்பேரில் விடுவிக்கப்பட்டார். அவர் கூறிய வலிகள் இரண்டும் சாதாரண காயம் என்று நான் சான்று வழங்கினேன். **நடராஜனின் விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்று அ.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை**

காயம்பட்ட நடராஜன் 108 ஆம்புலன்ஸ் மூலம் மருத்துவமனைக்கு வந்து சேர்ந்தாரா என்றால் தெரியாது. நடராஜனுக்கு வெளிப்புற காயங்கள் இருந்தனவா என்றால் இல்லை. நடராஜனின் உடம்பில் கையால் அடிக்கப்பட்டதற்கான தடம் எதுவும் இருந்ததா என்றால் இல்லை. நடராஜன் தனக்கு வலிகள் இருந்ததாக பொய் கூறியிருக்க வாய்ப்புள்ளதா என்றால் வாய்ப்புள்ளது.

**மறுவிசாரணை இல்லை.**